Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ சித்திரை 22 ஆம் நாள் துல்கஃதா 18 (4-5-61) வியாழக்கிழமை இதழ் 68

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

33

இன்பம் தரும் 303 பத்திகளை

3003

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்–2.

ஊரடங்குச் சட்ட நேரம்

குறைக்கப்படும் பார்லிமெண்டில் மந்திரி அறிவிப்பு

கொழும்பு, புதன்

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளில் ஊரடங்குச் சட்டம் கூடிய சீக்கிரம், மாலை 7 மணிமுதல் காலை 5 மணிவரை நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என ஜனப்பிரதிநிதிகள் சபையில் மந்திரி திரு. எஸ். பி. டி' சில்வா அறிவித்தார்.

இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலைமைபற்றி விவாதம் நடைபெற்றது. பொதுமக்களுக்கு விடுக்கப்பட்ட உத்தியோக ரீதியான அறிக்கையைத்தவிர, வேறு விசேஷம் எதுவும் புதிதாகத் தெரிவிப்பதற்கு இல்லையென, அப்போது சபை முதல்வர் திரு. எஸ். பி. டி' சில்வா அறிவித்தார்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பாவின் கேள்விக்கு மந்திரி திரு. சில்வா பதிலளிக்கையில், சில பகுதிகளில் கூடியசீக்கிரம் மாலை 7 முதல் காலை 5 மணிவரை ஊரடங்குச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்எனக் கூறினர்.

"யாழ்ப்பாணத்தில் அத்தியாவசியத் தேவைகள்பற்றி குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த திங்கட்கிழமை முதல் எவ்வித தட்டுப்பாடுமின்றி போதுமான பெட்ரோல் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது" என்றும் திரு. சில்வா தெரிவித்தார்.

அமெரிக்க வானவெளி பிரயாணி

கேப்கார்னிவல், மே 5

அமெரிக்க வானவெளி மனிதன் அலன் ஷெப்பர்ட், இன்று முழுதும் ஓய்வெடுத்துக் கொண்டார். நாளை அவர் வானவெளிப் பிரயாணம் மேற்கொள்வார்.

——

இந்தோனேஷியாவின் வெசாக் பரிசு

கொழும்பு, புதன்

வெசாக் கொண்டாட்டத்தின் அறிகுறியாக கொழும்பிலுள்ள இந்தோனேஷியத் தூதர், பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்காவிடம் பௌத்த சின்னம் ஒன்றை அன்பளிப்பு செய்தார். இந்தோனேஷிய மத விவகார மந்திரியின் சார்பில் இப்பரிசு வழங்கப்பட்டது.

திருக்கோணமலையில் கல் வீச்சு சம்பவம்

கொழும்பு, புதன்

"திருக்கோணமலை பட்டின சபைப் பகுதியில் கடற்படை வாகனம் ஒன்றின் மீது கல் வீசப்பட்டது"என பாதுகாப்பு-வெளிநாட்டு அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா விடுத்துள்ள அறிக்கை கூறியது.

"யாழ்ப்பாணத்தில் பாடசாலைக்குச் செல்லவிடாது பிள்ளைகளைத் தடுக்க பெற்றோர்கள் முயற்சி செய்தனராயினும், பயன் தரத்தக்க நடவடிக்கைகளைக் கல்வி அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். தோட்டங்களில் அமைதி நிலவுகிறது"என்றும் அறிக்கை கூறுகிறது.

அலஹாபாத்தில்மோதிலால் நேரு நூற்றுண்டு விழா

அலகாபாத், மே 5

பண்டித மோதிலால்நேருவின் நூற்றுண்டுவிழாவை அவரது புதல்வர் பண்டித ஜவஹர்லால்நேரு அலகாபாத்தில் தொடக்கிவைத்தார்"சுயராஜ்ய பவனில்" நடைபெற்ற விழாவின்போது சிறுமிகள் பக்திக் கீதங்கள் இசைக்க, குத்து விளக்கில் சுடர்ஏற்றி வைத்தார் நேரு. இது சம்பந்தமாக நடைபெற்ற பொருட்காட்சியில் நேரு குடும்பத்தினரின் புகைப்படங்கள், அவர்கள் நடவடிக்கைகள், நேரு குடும்பத்தினரின் ஜாதகங்கள், ஜவஹர்லால் லண்டனில் மாணவனாய் இருக்கும்போது தன் தாயாருக்கு எழுதிய கடிதம், மோதிலால்நேருவுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு பிரபலஸ்தர்கள் எழுதிய கடிதங்கள், அவர் எழுதிய கையெழுத்துப்பிரதிகள்,ஜவஹரின் திருமணஅழைப்பிதழ்கள், இன்னும்கணக்கற்ற பொருட்கள் காணப்பட்டன.

இப்பொருட்களை அலகாபாத் மியூஸியத்திற்கு பிரதமர் நேரு ஒப்படைத்தார்.

யாழ்ப்பாண - மலையாள புகையிலை வர்த்தக ஒப்பந்தம்

கேரள கவர்னரைச் சந்திக்க தூதுகோஷ்டி செல்கிறது

யாழ்ப்பாணம், புதன்

சென்ற செப்டம்பர் மாதத்துடன் காலாவதியான யாழ்ப்பாணம்–மலையாளம் ஒப்பந்த மீலசென்ஸை 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் வரையும் நீடிக்கச் செய்வது சம்பந்தமான தமது கோரிக்கையை கேரள கவர்னரிடம் நேரில் சமர்ப்பித்து நடவடிக்கை எடுப்பதற்காக யாழ்ப்பாணம் மலையாள புகையிலை ஐக்கிய வியாபாரத்தைச் சேர்ந்த மூவர் கொண்ட தூது கோஷ்டியொன்று வியாழக்கிழமை இந்தியாவுக்குப் பிரயாணமாகிறது.

இத்தூது கோஷ்டியில் முன்னாள் தபால் அமைச்சர் திரு. எஸ். நடேசபிள்ளை, சங்கத் தலைவர் திரு. ஆர். எஸ். எஸ்.குக், காரியதரிசி திரு. கே. நடராசா ஆகியோர் செல்கின்றனர்.

இவர்களது பேச்சு வார்த்தை இரண்டு மூன்று தினங்களுக்குத் தொடர்ந்து நடைபெறுமென்றும் இத் தூது கோஷ்டியைச் சந்திக்க கேரள கவர்னர் தமது விருப்பத்தைத் தெரிவித்திருப்பதாகவும் தெரிகிறது.

மலையாளப் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு யாழ்ப்பாண மலையாளப புகையிலை ஒப்பந்தம் முடிவுற்றதால் ஏற்படும் விளைவுகளைத் தற்காலிகமாக நீக்குவதே தூது கோஷ்டியின் நோக்கமாகும்.

மலையாளப் புகையிலை உற்பத்தியாளர் அதனைப் பயிரிட்டுப் பயனடையக்கூடிய நீண்ட திட்டமொன்றை அடுத்தாண்டுத் தொடக்கத்தில் சமாசம் பூரணப்படுத்திவிடுமென்றும் அதனால் கமக்காரர்களுக்கு எதுவித கஷ்டமும் ஏற்படாதென்றும் தெரிகிறது. இதற்கான சகல ஏற்பாடுகளையும் சமாசம் பூர்த்தி செய்து வைத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

கமக்காரர்களுக்கு வசதியான ஓர் இடைக்கால ஏற்பாட்டைச் செய்யவே இத் தூதுகோஷ்டி இந்தியா செல்கிறது.

'அடக்கு முறையால் தேசியஇயக்கம் வளரும்'

சேனட்டர் நடேசன் பேச்சு

கொழும்பு, புதன்

"தேசிய இயக்கங்கள் அடக்கு முறையால்தான் வளர்ச்சியடைகின்றன. இலங்கை இராணுவம் யாழ்ப்பாணப்பகுதியில் அதன் நடவடிக்கைகளால், ஒரு தேசிய சிறுபான்மையினத்தவருக்கு அவர்களுடைய மொழி உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான அவர்களுடைய இயக்கத்துக்கு மேலும் தூண்டுதல் அளித்துள்ளது. சரித்திரம் எங்களுக்குஎதையாவது போதிக்குமானால் அது இதைத்தான் போதிக்கும்."

இவ்வாறு சேனட்டர் எஸ். நடேசன் நேற்றுப் பிற்பகல் சேனட்சபையில் ஒத்திவைப்புப் பிரேரணைமீது பேசுகையில் கூறினர்.

"இலங்கையை இன்று எதிர்நோக்கியுள்ள பிரச்சினைக்கு ஆயுதப்படைகளின் மூலம் உண்மையான தீர்வுகாணமுடியாதுஎன்பதையும் கவனிக்க வேண்டும். இலங்கை முன்னேறிச் செல்லவேண்டுமானால் மொழிப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணவேண்டும்" என்று சேனட்டர் நடேசன் மேலும் கூறினர்.

"யாழ்ப்பாணப்பகுதியில் இராணுவத்தின் நடவடிக்கை சம்பந்தமாக எழுந்துள்ளபிரச்சினை அரசாங்கத்தின் பரிசீலனைக்கு மிகவும் முக்கியமான ஒன்று" என்று குறிப்பிட்ட சேனட்டர் நடேசன் மேலும் கூறியதாவது:-

அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்படுமுன்பே முத்திரைகள் இல்லாத காரணத்தினாலும், தபால் நிலையங்கள் பூரணமாக இல்லாததாலும், முக்கியமான விஷயங்களில் தபால் சேவகர்கள் கவனம் செலுத்தவேண்டியிருந்ததாலும் தமிழரசு தபால்சேவை இயங்காமல் நின்றுவிட்டது. தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரைஅவர்கள் நாட்டின் சட்டத்தை மீறிவிட்டார்களென்பதுதான் அவர்களுக்குள்ள ஒரே பெருமை.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களில் எந்தப் பகுதியினரும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்களாயின் அது அரசாங்கக் காரியாலயங்களின் வாசல்களைத் தடைசெய்வதில் ஈடுபட்டிருந்த செயல் ஒன்றேதான். நான்முன்பு குறிப்பிட்டது போல இந்த நாட்டின் இராணுவப்படை திறமைமிக்க கேணல் உடுகமையின் தலைமையின்கீழ், யாழ்ப்பாணக்கச்சேரி வாசலில் பலாத்காரமற்றசுமார் 200 சத்தியாக்கிரகிகளைத் துப்பாக்கிப்பிரயோக நடவடிக்கையை மேற்கொள்ளாமல் ஆனால் 'பெல்ட்', குறுந்தடி, துப்பாக்கிப்பிடி, கால் ஆகியவைகளைத்

(2-ம் பக்கம் பார்க்க)

வைத்திய கல்லூரிகளில் ஆயுர்வேத பகுதிகள்

இந்தியாவிலே 6 வைத்தியக் கல்லூரிகளில் ஆயுர்வேத பகுதிகளை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

இப்பகுதிகள் ஓர் ஆயுர்வேத பேராசிரியரின் பொறுப்பில் இருக்கும். பல படுக்கை நோயாளர் இப்பிரிவில் இருப்பர். வைத்திய மாணவர்களுக்கு 6 மாத காலத்துக்கு, ஆயுர்வேத வைத்திய முறைகளையும் பிரயோகங்களையும் கற்பிக்கவும், ஆராய்ச்சிகள் நடத்தவும் இங்கு வசதி செய்யப்படும். இஷ்டப்பட்ட மாணவர் இப் பயிற்சி பெறலாம். கட்டாயமில்லை.

'சுச்ருத சம்ஹிதை', வாக்பட்டாவின் 'அஷ்டாங்க ஹிருதயம்' இவ்விரு ஆயுர்வேத நூல்களையும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் மொழி பெயர்க்க சுகாதார அமைச்சு அங்கீகாரமளித்துள்ளது. ஒரு வருஷத்தில் இவ்வேலை முடிந்து, மலிவுப் பதிப்புகளும் பொது மக்களுக்குக் கிடைப்பதாக இருக்கும்.

ஆயுர்வேதம், நவீன வைத்தியம் இவற்றிலே நிபுணர்களை அழைத்து, பல நோய்களைப் பற்றியும் விவாதித்து, இரு வைத்திய முறைகளையும் சிகிச்சைக்குப் பயன்படுத்துவதில் ஒரு சீரான ஏற்பாட்டைச் செய்யும்படி கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

——

தாகூர் முத்திரைகள்

போன், மே 3

தாகூரின் நூற்றுண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு மேற்கு ஜெர்மனியில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பங்களூரில் இன்று தாகூரின் திரைப்படக் காட்சியை முதன் மந்திரி திரு. ஜட்டி ஆரம்பித்து வைத்தார்.

இம்மாதம் 7-ம் தேதி தாகூரின் உருவப்படம் பொறித்த 15 நயா பைசா தபால் முத்திரைகள் வெளியிடப்படும். அதற்கு முதல் தினம் 5 நயா பைசா பெறுமதியான கவர்கள் வெளியிடப்படும்.

மணிவாக்கு

சத்தியம் எனும் திருக்கோவிலை அடைய விரும்புவோன் அஹிம்சை எனும் நெறியிலேதான் இயங்கவேண்டும்.

—காந்திஜி

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு சித்திரை மீ 22 வ (4-5-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

மதுவிலக்கு

இலங்கையிலே குற்றங்களைக் குறைப்பதற்கு பிரதம நீதியரசர் பஸநாயக்கா ஒரு நல்ல யோசனை கூறியுள்ளார். அரசாங்க சிப்பந்திகள் யாரும் மதுபானம் செய்யக் கூடாதென்று அவர்களது வேலை நிபந்தனைகளில் புதிதாக ஒரு விதியைச் சேர்க்க வேண்டுமென்றும், அப்படிச் செய்தால் குடிப் பிரச்சினை பெருமளவு தீருவதுடன், குற்றங்களும் வெகுவாகக் குறையுமென்றும் அவர் ஒரு பள்ளிக்கூட பரிசளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். இந்த யோசனையை அரசாங்கம் அலட்சியப்படுத்த முடியாது.

நாடு அங்கியருக்கு அடிமைப் பட்டிருக்கையில், குடிப்பது ஒரு நாகரிகமாகக் கருதப்பட்டது. அரசாங்க சிப்பந்திகளில் சிலர் குடிப் பழக்கம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அப்படிப்பட்டவர்களது எண்ணிக்கை மிகக் குறைவு. நீதி அரசர் கூறுவதுபோல், அரசாங்க அதிகாரிகள் மற்றவர்களுக்கு வழி காட்ட வேண்டியவர்கள். ஆனால் அவர்களே இரவெல்லாம் குடியிலும் கூத்திலும் சீட்டாட்டத்திலும் கழிப்பதாயின், அவர்களின் கீழ் வேலை செய்பவர்களும், அதுதான் நாகரிகமென்று கருதி அதே பழக்கத்தைப் பின்பற்றுகின்றார்கள். அரசாங்க சிப்பந்திகளில் சிலர் குடிப் பழக்கத்துக்கு அடிமைப்பட்டு, வேலை இழந்ததுடன், அவர்கள் குடும்பமே பரிதவிப்பதையும் நாமறிவோம். ஆகவே அரசாங்க சிப்பந்திகள் யாரும் குடிக்கப் படாதென்று ஒரு நிபந்தனை போடுவது, அரசாங்க சிப்பந்திகளுக்கே பெரு நன்மையாகும்.

குடிப் பழக்கமுள்ளவருக்கு எவ்வளவு வருமானம் வந்தாலும் போதாது. லஞ்சம் வாங்கவும் அது தூண்டும். இதனால் நிர்வாகத்திலும் ஊழல்கள் மலிய இடமேற்படுகிறது. அவ்வித அரசாங்க சிப்பந்தி, நிர்வாகத்துக்குப் பாதகமாவாரேயன்றி, சாதகமாக இருக்க முடியாது. நிர்வாகத்தின் மேலான நன்மையைக் கருதியும், மதுவிலக்கு நிபந்தனை வரவேற்கத்தக்கதாகும்.

அரசாங்க அதிகாரிகள் மட்டுமன்றி, அமைச்சர்கள், பார்லிமெண்ட் மெம்பர்கள், ஸ்தலஸ்தாபன மெம்பர்கள் முதலியவர்களும் மதுவிலக்கைக் கைக்கொண்டால், நாட்டு நிர்வாகம் மேம்படுவதுடன் மற்றப் பொதுமக்களுக்கும் அவர்கள் மேலான வழி காட்டிகளாக இருப்பர். அதிகாரிகளே மட்டுமன்றி, பார்லிமெண்ட், ஸ்தலஸ்தாபன பிரதிநிதிகளையும் மக்கள் அதிகமாகப் பின்பற்றுகின்றார்கள். ஆகவே அரசாங்க சிப்பந்திகள் குடிக்கப் படாதென்ற சட்டம் செய்யுமுன் அமைச்சர்களும் பாராளுமன்ற அங்கத்தவர்களும் மதுவிலக்க அதிக காரணமுண்டு. குடிப்பழக்கமுள்ளவர் யாரும் பார்லிமெண்ட் தேர்தலுக்கோ, ஸ்தலஸ்தாபன தேர்தலுக்கோ அபேட்சகராக நிற்கவோ, அந்த சபைகளில் அங்கம் வகிக்கவோ கூடாதென்று ஒரு சட்டம் போடவேண்டியேற்படும். ஆனால் இப்போதைய நிலையில் இது முடியுமா? சந்தேகம்.

நாட்டில் பூரண மதுவிலக்கு அமுலுக்கு வருமாயின் பொது மக்கள் உள்ளிட்டு, லைசன்ஸ் இல்லாத யாரும் குடிக்கமுடியாது. குற்றங்களுக்கும் மோட்டார் விபத்துக்களுக்கும் முக்கிய காரணம் குடிவெறி என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. பூரண மதுவிலக்கு வருமாயின் குற்றங்களும் மோட்டார் விபத்துக்களும் குறையக்கூடும். இந்தியாவில் பூரண மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று அரசியல் திட்டத்திலேயேகுறிப்பிட்டிருக்கிறார்கள். பல மதங்களும் மதுபானத்தை ஒரு பாவமாகக் கருதுகின்றன. ஆகவே இலங்கையில் பூரண மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவர முக்கிய காரணங்களுண்டு. கள்ளச் சாராயம் அதிகரிக்குமென்று ஆட்சேபம் கூறலாம். என்றாலும் இங்கு பொது வாழ்வு மேம்பட பூரண மதுவிலக்கு பெரிதும் வழி செய்யும்.

"சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட அரசாங்கம் தவறிவிட்டது"

சனட்சபையில் திரு. நடேசன் உரை

சென்ற செவ்வாய்க்கிழமை சனட் சபையில் ஒத்திவைப்புப் பிரேரணையின் போது சனட்டர் நடேசன் அவசரகால நிலைமைபற்றிப் பேசினார். அவரது பேச்சு சபையின் உபகமிட்டியினால் தணிக்கை செய்யப்பட்டபின் பத்திரிகைகளில் பிரசுரிக்க அனுமதியளிக்கப்பட்டது. சனட்டர் நடேசனின் பேச்சின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டு ஒருவாரத்திற்கும் மேலாகிவிட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் சம்பந்தப்பட்ட வரையில் இதுவரை சாதாரண ஜனநாயக உரிமைகள் தடைப்படுத்தப்பட்டுள்ளன. கடுமையான செய்தித் தணிக்கை விதிக்கப்பட்டுள்ளது. இருவரைத் தவிர தமிழ் மக்களின் தெரிவு செய்யப்பெற்ற இதர பிரதிநிதிகள் எல்லோரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணமேயர், முன்பு பிரபல அரசாங்க ஊழியராகவும் பின்னர் அரசாங்க மந்திரியாகவும் இருந்த சேர் கந்தையா வைத்தியநாதன், கியூ. ஸி. யும் முன்னாள் சொலிசிட்டர் ஜெனரலுமான திரு. எம். திருச்செல்வமும் மற்றும் பல தமிழ்த் தலைவர்களும் கைதுசெய்யப்பட்டு விசாரணை எதுவுமின்றித் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். தமிழ் மக்களின் பிரதிநிதிகளின் குரல் உண்மையில் நிசப்தமாக்கப்பட்டுவிட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பகுதியைப் பொறுத்த வரையில், வெற்றி கொண்டு கைப்பற்றப்பட்ட எதிரியின் பிரதேசத்தில் இராணுவத்தினர் எப்படி நடந்துகொள்வார்களோ அப்படி நடந்து கொள்கின்றனர்.

இது போன்ற நிலைமை இந்த நாட்டின் இருபெரும் சமூகங்களுக்கிடையிலும் உள்ள உறவுக்குப் பாரதூரமான விளைவு ஏற்படுத்தும். இந்த நிலைமை நீடிப்பது நாட்டின் பொருளாதாரத்தையும் பாதிக்கும்.

இதுபோன்ற சமயத்தில் இச் சபையின் அங்கத்தவர்கள் தங்கள் அபிப்பிராயத்தை நேர்மையான முறையில் வெளியிட வேண்டும். எனவேதான் ஒத்திவைப்புப் பிரேரணை மீதான இச் சந்தர்ப்பத்தை எனது அபிப்பிராயத்தைத் தெரிவிப்பதற்கும் அரசாங்கத்தின் பரிசீலனைக்குச் சில கேள்விகளைக் கேட்கவும் நான் பயன்படுத்த விரும்புகிறேன்.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதுதான் பண்புள்ள எந்த நிர்வாகத்தினதும் முக்கியமானதும் முதல் தரமானதுமான கடமையென்பதை நான் முதலில் வலியுறுத்த விரும்புகிறேன். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டத் தவறும் எந்த அரசாங்கமும், தனது பிரஜைகளுக்கு அளிக்க வேண்டிய பாதுகாப்பை வழங்கத் தகுதியற்றதாகி விடுகிறது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்ற அடிப்படைக் கொள்கையை நாமெல்லோரும் ஒப்புக்கொள்கிறோம்.

அரசாங்கம் தவறிவிட்டது

இந்தக் கொள்கையின் அடிப்படையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 1961-ம் ஆண்டு பெப்ரவரி 20-ந்திகதி தொடக்கம் நடைபெற்ற சம்பவங்களைக் கொண்டு ஆராய்ந்தால் சட்டத்தையும் ஒழுங்கையும் நாட்டவேண்டிய தலையாய கடமையில் அரசாங்கம் தவறிவிட்டதென்பதைக் காணமுடியும்.

தமிழ்ப் பேசும் மக்களின் ஜீவாதார உரிமை என்று தமிழரசுக் கட்சி கருதிய விஷயத்தில் அரசாங்கம் விட்டுக் கொடுப்பதாக இவ்வையென்பதைக் கண்ட கட்சி, அந்த உரிமைகளைப் பெறுவதற்காக சத்தியாக்கிரக இயக்கம் என்ற ஒரு இயக்கத்தை மேற்கொண்டது. மொழிப்பிரச்சினையில் விட்டுக்கொடாத கொள்கை காரணமாக, தமிழரசுக் கட்சியை நேரடி நடவடிக்கையை மேற்கொள்ளும்படி செய்தது அரசாங்கமே.

இந்தச் சத்தியாக்கிரக இயக்கம், ஆயுதம் எதுவுமில்லாத முக்கியமாக அமைதியான ஆண்களும் பெண்களும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள கச்சேரி வாசல்களையும் மற்றும் அரசாங்கக் காரியாலயங்களின் வாசல்களையும், இக்காரியாலயங்களுக்குள் அரசாங்கஊழியர்கள்சென்று அலுவல்கள் செய்யாதவகையில் தடைசெய்தது.

சத்தியாக்கிரகிகள் ஒரளவு பயமுறுத்தல் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டார்களென்று அரசாங்க அதிகாரியொருவர் கூறினர்.

பெரும் தொகையாளர் உள்ள ஒரு இடத்தில் எல்லோரும் உண்மையான ஒரு சத்தியாக்கிரகி அனுஷ்டிக்க வேண்டிய உயர்ந்த இலட்சியத்தைக் கடைப்பிடிப்பார்களென்று எதிர்பார்ப்பது அசாத்தியம்.

இடையிடையே பொதுக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடைபெற்றன. இந்த ஊர்வலங்களிலும் பொதுக்கூட்டங்களிலும் தங்கள் மொழி யுரிமை கோரி மக்கள் கலந்து கொண்டனர். இந்த ஊர்வலங்களில் குறிப்பாகவாலிபர்கள், பொலிஸார் அல்லது இராணுவத்தினர் மீது ஏதாவது சொல்லிச் சென்றிருக்கக் கூடியது சாத்தியமே. பொதுவாக இக்கிளர்ச்சி அமைதியான, பலாத்காரமற்ற தென்பதை எல்லோருமே ஒப்புக்கொண்டனர்.

சத்தியாக்கிரகிகளைக் கனவான்கள் என்று வடபகுதி அரசாங்க அதிபர்கூடக் குறிப்பிட்டிருந்தார். (தொடரும்)

அடக்குமுறையால்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திறமையாகப் பாவித்து ஆச்சரியத்திலாழ்த்தியதுடன் சாதுரியமாகப் போர் புரிந்து எதிரிகளை வென்று வாகை சூடினர்.

இனி அவர்கள் செய்யவேண்டிய ஒரேயொரு வேலை பொது மக்கள் தங்கள் அலுவல்களைக் கவனிப்பதற்கு அரசாங்க காரியாலயங்களின் வாசல்களைத் திறந்து வைத்திருக்கச் செய்வதுதான். கச்சேரியினதும் மற்றும் அரசாங்க காரியாலயங்களின் வாசல்களிலும் கூட்டம் கூடாதவாறு தடுக்கவும் நியாயமான அலுவல்களைக் கவனிக்கச் செல்பவர்களை உள்ளே அனுமதிப்பதற்காகவும் வாசல்களில் ஆயுதந்தரித்த சிப்பாய்களை நிறுத்துவதன் மூலம் இதைச் செய்திருக்கலாம். கச்சேரியின் மற்றும் அரசாங்கக் காரியாலயங்களையும் தவிர்ந்த இதர பகுதிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் அமைதியாகவும், பலாத்காரமற்றும் தங்கள் நாளாந்த அலுவல்களைக் கவனித்து வந்தனர். இதைச் செய்வதற்குப் பதிலாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முழுவதிலும் இராணுவம் கட்டவிழ்த்துவிடப்பட்டது ஏன்? குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதியில் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியது ஏன்? ஆரம்பத்தில் ஊரடங்குச் சட்டம் அவசியமென்றுணர்ந்திருந்தாலும் அது இன்னும் தொடர்ந்திருந்துவருவது ஏன்? ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தப்படாத கிராமங்களிலும் இராணுவத்தினர் தாங்களாகவே ஊரடங்குச் சட்டம் பிரகடனப்படுத்தியது ஏன்? இன்றையவெய்யிற் காலத்தில் அதிகாலை நான்கு மணிக்கே வயலுக்குச் செல்லும் யாழ்ப்பாணக் கமக்காரர்கள் காலை ஆறு மணிக்குப் பின்னரும் வயலுக்குப் போகத் தடை செய்யப்படுவதேன்?

யுத்தகாலத்தைப்போல் ஏன் கார்களைக் கைப்பற்ற வேண்டும்? ஒவ்வொருவருக்கும் போதுமான பெட்ரோல் இருக்கும்போது யாழ்ப்பாணத்தில் மட்டும் பர்மிட்மூலம் ஏன் பெட்ரோல் வழங்கவேண்டும்? கார்ச் சொந்தக்காரர்கள் பர்மிட் வாங்கக்கச்சேரியில் கியூவரிசையில் நிற்குமாறு ஏன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

சமாதானமான யாழ்ப்பாண மக்களின்மீது இராணுவத்தை இவ்விதம் கட்டவிழ்த்துவிடுவதற்குக் காரணம் இல்லை. யாழ்ப்பாணம் கோர்ட்டிலுள்ள வழக்குகளை கொழும்புக்கு மாற்ற முயற்சி செய்ததின் மூலம் அரசாங்கம் நீதி நிர்வாகத்திலும் தலையிடப்பார்த்தது. ராணுவத்தினர் அல்லது பொலிசாருக்கெதிரான வழக்குகளைக் கொழும்புக்கு மாற்றுவதின்மூலம் சாட்சிகளை ஆஜராகாமல் செய்யவே இந்த ஏற்பாடு.

யாழ்ப்பாணத்திலுள்ள நீதிபதிகள் இவ்விஷயத்தில் நீதி செய்வார்கள் என்பதில் அரசாங்கத்திற்கு நம்பிக்கையிருக்காதபட்சத்தில், வேறு நீதிபதிகளை அங்கு நியமிப்பதே தவிர, 250 மைல்களுக்கப்பால் வழக்குகளை மாற்றுவதல்ல."

ஐயாறன் எழுதுவது

வானவெளிக்கு ரொக்கெட் மூலம் ஒரு மனிதனை அனுப்ப அமெரிக்கா செய்திருந்த ஏற்பாட்டை 48 மணி நேரத்துக்கு ஒத்திப்போட்டுவிட்டதாக ஓர் அமெரிக்கச் செய்தி கூறுகிறது. மழை வந்துவிட்டதும், சீதோஷ்ண நிலை சரிவர இல்லாததுமே இதற்குக் காரணமாம்.

ஒரு மனித உயிரை ஆபத்துக்குள்ளாக்காமல், அந்த முயற்சியை ஒத்திப்போட்டுவிட்டது நல்லதே.

ஆனால், ரஷ்யாவின் மனிதன் முன்னறிக்கை எதுவுமின்றி, வானவெளிமூலம் பூமண்டலத்தை ஒரு சுற்றுச்சுற்றி வந்திருக்கையில், அமெரிக்கா ஏன் இந்தக் குறைந்த முயற்சிகளுக்கு வீணை முன்விளம்பரம் அளித்து தன்னைப் பரிகாசத்துக்கு உள்ளாக்கிக்கொள்ள வேண்டும்? பேசாமல் காரியம் செய்து விட்டு, வெற்றி கிடைத்தபின் உலகுக்கு அறிவிக்கப்படாதா?

∴ ∴ ∴

அரசாங்க குமாஸ்தா ஒருவருக்கு மாதம் 250 ரூபாய் தான் சம்பளமாம். அவர் கடன்பட்டு ஒரு மோட்டார் வாங்கியுள்ளதுடன், வீண் ஆடம்பரமான வாழ்க்கை வாழ்வதாயும், வரவுக்குமிஞ்சி செலவு செய்வதாயும் அவருடைய தகப்பனார் என்னிடம் மிக விசாரப்பட்டுக் கூறினர்.

தன் மகன் மற்றப்படி நல்ல குணவானென்றும், ஆனால், வீண் ஆடம்பரச்செலவுகள் செய்து பலரிடமும் கடன்படுவதும் அவர்கள் தம்மிடம் கேட்பதும் பெரும் மனவேதனையாகவும் வெட்கமாகவும் இருப்பதாயும் தெரிவித்தார்.

இதைக்கேட்கவே மிகக் கஷ்டமாக இருந்தது. விவகாரம் செய்துகொள்ளுகிறோம். ஆண் குழந்தை பிறந்ததும் ஒரே மகிழ்ச்சி. படிக்கவைக்கிறோம். மகனுக்கு அரசாங்க குமாஸ்தா வேலையும் கிடைத்துவிடுகிறது. வயோதிபத்தில் மகன் ஏதாவது உதவிசெய்யவேண்டியிருக்க, மகன் வருவாய்க்கு அதிகமாகச் செலவுசெய்து, இப்படி ஊதாரி வாழ்க்கை வாழ்ந்தால் பெற்றோருக்கு எப்படி இருக்கும்?

"ஆனமுதலில் அதிகம் செலவானால் மானமழிந்து மதிகெட்டு, போனதிசை எல்லார்க்கும் கள்வனும் ஏழ் பிறப்பும் தீயனும், நல்லார்க்கும் பொல்லனை" ஆக வேண்டியிருக்குமென்பது தமிழ் மூதுரையல்வா?

∴ ∴ ∴

தன் பையனின் இந்த டம்பாச்சாரி வாழ்க்கைக்குத் தானேதான் காரணம் என்றார் அவர். ஆனால் அவரோ மிகமிகச் சிக்கனமாக வாழ்பவர். எப்படியென்று கேட்டேன். "சிறுவயதில் என்மனதில் இவ்வித பலவித ஆசைகள் நிறைவேறாமல் அடங்கிப் போயிருக்கலாம். அச்சமயம் பிறந்த பையனுக்கு அந்தக் குணங்களெல்லாம் ஏற்பட்டிருக்கலாம்" என்றார் அவர்.

மகாத்மா காந்தியும் தனது மூத்த மகனைப்பற்றி இப்படித்தான் கூறுவதுண்டு. ஆகவே நம் குழந்தைகள் நல்லபடியாக இருக்க, நாம் சிறுவயது முதலே மனதிலும் நல்லவர்களாக இருக்கவேண்டியது அவசியமாகிறது.

∴ ∴ ∴

இதெல்லாம் தந்தை கூறியதைக் கேட்டு எழுதுகிறேன். இது சற்று மிகைப்பட்டுமிருக்கலாம். மகன் கூறும் சமாதானம் என்னவோ?

கோதாவரி, கிருஷ்ணை ஆகிய நதிகளின் நீர் சப்ளை பற்றி அராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஒரு மத்திய கமிஷன் அமைக்கப்பட்டிருக்கிறது.

வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.

உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இலவம்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி.
Advt. 91 யாழ்ப்பாணம்.

ஆசிரியர்கள் சம்பளம் பெற்றனர்

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டியிலுள்ள சகல ஆசிரியருக்கும் பங்குனி சித்திரை ஆகிய இருமாதச்சம்பளத்துடன் புத்தாண்டு முற்பணமும் கிடைத்துள்ளது. ஆனால் இதுவரை காசோலை மூலம் சம்பளம் பெற்ற கல்லூரி ஆசிரியர் இந்தத் தடவை, தபாற் கந்தோரில் பணம் பெறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

அங்கோலாவில் தேசியவாதிகளின் முதல் வெற்றி

நாட்டில் பெரும்பகுதிகள் கைப்பற்றப்பட்டன

லண்டன், மே 3

போர்த்துக்கீசிய காலனி நாடான அங்கோலாவில் தேசியவாதிகள் முக்கியமான ஒரு பகுதியைக் கைப்பற்றி விட்டார்களென்று அங்கிருந்து கிடைத்த ஒரு செய்தி கூறுகிறது. தேசியவாதிகளின் தலைவர் திரு. ஜோஷேடிஸ் மார்க் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஆனால் அங்கோலா தேசியவாதிகளின் சுதந்திரக் கிளர்ச்சியை அடக்குவதில் போர்த்துக்கல்துருப்புகள் தொடர்ந்து ஈடுபட்டுள்ளன.

வடக்கு அங்கோலாவில் முக்கியமான ஒரு பகுதியை தேசியவாதிகள் கைப்பற்றியதைத் தொடர்ந்து போர்த்துக்கல்இராணுவத்தளபதிஅங்கோலாவுக்குச் சென்றுள்ளார். போர்த்துக்கல்படைபலம் முழுவதும் அங்கோலாவில் உபயோகிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

போர்த்துக்கலின் ஆறு போர்க்கப்பல்கள் அங்கோலாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. அதே சமயம் தேசியவாதிகளின் கிளர்ச்சியை அடக்க விமானத்திலிருந்து குண்டுகள் வீசப்படுகின்றன.

நேற்றிரவு வடக்கு அங்கோலாவில் தேசியவாதிகளுக்கும் போர்த்துக்கேய துருப்புக்களுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில் மூன்று போர்த்துக்கேயத் துருப்புக்கள் கொல்லப்பட்டனர்.

தற்பொழுது லியப்போல்ட் வில்லியிலுள்ள அங்கோலா தேசிய விடுதலை இயக்கத் தலைமைக் காரியாலயத்தை அங்கோலாவுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தேசியவாதிகளின் தலைவர் அறிவித்தார்.

'கல்வி நிலையங்களின் வளர்ச்சியில் பங்கு கொள்ள வேண்டும்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

"எம்மை வளர்த்துவிட்ட கல்வி நிலையங்கள் பொதுஸ்தாபனங்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் நாம் ஒவ்வொருவரும் முக்கிய பங்கு எடுத்துக் கொள்ளாவிடின் எமது பின் சந்ததியினரின் வாழ்வு மலர்ச்சியடைவதற்கு நாம் இடையூறு செய்தவர்கள் என்ற பழிச் சொல்லுக்கு ஆளாக நேரிடும். இப் பழிச் சொல்லுக்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது எமது கடமையாகும்."

மேற்கண்டவாறு கடந்த சனிக்கிழமை ஆவரங்கால் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற விருந்துபசாரமொன்றிற்குத் தலைமைவகித்து உரை நிகழ்த்தும்போது கிராமச்சங்க அங்கத்தவரும் கிராம முன்னேற்றச்சங்கத் தலைவருமான திரு. க. சின்னத்துரை கூறினர். கல்முனை பட்டின சங்கத்தில் உத்தியோக நியமனம் பெற்றுச் செல்லும் திரு. எஸ். திருஞானசம்பந்தருக்கு ஆவரங்கால் கிராம முன்னேற்றச் சங்கம், மத்திய சனசமூக நிலையம், இளைஞர் விவசாயக் கழகம் ஆகியவற்றின் சார்பில் ஓர் பிரிவு விருந்துபசாரம் அளிக்கப்பட்டது.

அடுத்து இளைஞர் விவசாயக் கழகக் காரியதரிசி திரு. என். அருளம்பலம் பேசும்போது வேற்றாருக்கு உத்தியோக காரணமாகவோ தற்காலிகமாகச் செல்லும் பலர் தமது கிராமத்தையும் நாட்டையும் நிரந்தரமாக மறந்து விடும் துர்ப்பாக்கிய நிலை முற்றுக நீங்க வேண்டுமென்றும் எங்கு சென்றாலும் தமது பிறந்தகத்துப் புகழ் ஒளியைப் பரப்பத் தவறக்கூடாதென்றும் கேட்டுக் கொண்டார். திரு. எஸ். திருஞானசம்பந்தர் தமக்களிக்கப்பட்ட விருந்துபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசினர்.

திருவாளர்கள் மு. ஆனந்த கிருஷ்ணர், செ. பொன்னையா, சி. சிவசுப்பிரமணியம், ஆ. திருநாவுக்கரசு ஆகியோரும் மற்றும் சிலரும் உரை நிகழ்த்தினர்கள்.

'ஷோம்பே விடுதலைக்கு

நடவடிக்கை எடுங்கள்'

ஹமர்ஷீல்டுக்கு கடாங்காகோரிக்கை

லியப்போல்ட்வில்லி, மே 3

காங்கோவின் லியப்போல்ட்வில்லி அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள கடாங்கா ஜனாதிபதி ஷோம்பேயை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும் ஷோம்பே விடுதலையானவுடன் ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை அமுல்நடத்த ஒத்துழைப்பதாகவும் கடாங்கா அரசாங்கம் ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. டாக் ஹமர்ஷீல்டுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் தெரிவித்துள்ளது.

காங்கோவின் மாகாண அரசாங்கங்களின் படைகளை நிராயுதபாணிகளாக்கவேண்டுமென்று பந்தோபஸ்து சபை தீர்மானம் நிறைவேற்றிய போது "அது ஒருயுத்தப்பிரகடனம்" என்று ஷோம்பே தெரிவித்தார்.

கடாங்கா அரசாங்கம் திரு. ஹமர்ஷீல்டுக்கு எழுதியுள்ள கடிதத்திலிருந்து கடாங்கா அரசாங்கம் ஐ. நா. எதிர்ப்பை கைவிட்டுவிட்டதாகக் கருதப்படுகிறது.

காங்கோவின் எதிர்காலம் பற்றி ஆராய்வதற்கு காங்கோலியத் தலைவர்களைக் கொண்ட புதிய மகாநாடொன்றைக் கூட்டவேண்டுமென்றும் கடாங்கா அரசாங்கம் யோசனை கூறியுள்ளது.

கொக்குவில் ஹத்வில்லி என்ற இடத்தில் நடைபெற்ற காங்கோலியத் தலைவர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற ஷோம்பே காங்கோ ஜனாதிபதி கஸவுபுவுடன் வேற்றுமை கொண்டு வெளியேறிய போதுதான் காங்கோலியத் துருப்புகளால் கைதுசெய்யப்பட்டார்.

ஸ்ரீவிக்கினேஸ்வரா வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம், செவ்வாய்

அச்சுவேலி தெற்குஸ்ரீ விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் அச்சுவேலி வடக்கு கலாஜோதி சனசமூகநிலைய கைப்பந்தாட்டக்கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான கைப்பந்தாட்டப் போட்டியில் அச்சுவேலி தெற்கு ஸ்ரீவிக்கினேஸ்வரா சனசமூகநிலைய விளையாட்டுக் கழகம் 2-1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

ஸ்ரீவிக்கினேஸ்வரா விளையாட்டுத்திடலில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு.எஸ்.செல்வராசா மஸ்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

ஆடம்பரமற்ற கோயில் திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

இப்பகுதியிலுள்ள கோயில் உற்சவங்கள் மிக அமைதியாக நடைபெறுகின்றன. பகல் உற்சவங்கள் காலையில் முடிவுற்றதைத் தொடர்ந்து இரவு உற்சவங்களும் பகலிலேயே நடைபெற்று முடிகின்றன.

வருடாவருடம் பகலிலும் இரவிலும் நடைபெறும் இறுதி இரண்டு உற்சவங்களிலும், இடம்பெறும் அதிக செலவிலான வேடிக்கைத் திருவிழாக்கள் எதுவும் இல்லாமல் புத்தூர் கொடித்தூக்கிப் பிள்ளையார் கோயிலில் நடைபெறும் பத்துநாள் உற்சவங்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவுற்றன.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றுவரும் ஆவரங்கால் ஞானவயிரவகோவில் உற்சவங்களும் காலத்தோடேயே அமைதியாக நடைபெறுகின்றன. உற்சவ இறுதிநாளான செவ்வாய்க்கிழமை அன்று விசேஷ சங்காபிஷேகம் நடைபெற மேற்படி கோவில் தர்மகர்த்தாக்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

ரசாயன, வைத்திய பயிற்சி பெற

சீமை செல்லும் இளம் தம்பதிகள்

இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதியில் உதவி மாவட்டப் போக்குவரத்து அதிகாரியாக கடமையாற்றிய திரு. கே. திருநாவுக்கரசு தமது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு இங்கிலாந்துக்குப் புறப்பட்டுள்ளார். ரசாயனத்திலும் யந்திரக் கலையிலும் பட்டம் பெற்றுள்ள இவர் 'இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ்' என்னும் ஸ்தாபனத்தில் ரசாயன பொறி இயல் தொழிலில் பயிற்சி பெறுவார். அச்சுவேலியைச்சேர்ந்த காலஞ்சென்ற திரு. கந்தையாவின் புதல்வரான திரு. திருநாவுக்கரசு யாழ்ப்பாணக் கல்லூரிப் பழைய மாணவராவர். அவரது இரு சகோதரர்கள் இங்கிலாந்திலும் மற்றொரு சகோதரர் கானாவிலும் இப்போது இருக்கின்றனர்.

அவரது துணைவி திருமதி சத்தியமலரும் கணவருடன் கூடவே செல்கிறார். சென்ற வருடம் நடைபெற்ற இரண்டாவது வைத்தியப் பரீட்சையில் முதலாவதாகத் தேறிய இவர் இங்கிலாந்தில் தொடர்ந்து வைத்தியக் கல்வி பயில்வார். சற்குணன் தம்பதிகளின் மூன்றாவது புதல்வியான சத்தி மலர் மெதடிஸ்ட் கல்லூரியின் பழைய மாணவியாவர்.

விசேஷ வழிபாடுகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணக்குடாநாடு பூராவிலுமுள்ள பெரும்பாலான சைவாலயங்களில் சித்திரைப் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு விசேஷ பூசைகளும் வழிபாடுகளும் கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றன.

அதிகமான ஆலயங்களில் பொதுமக்களால் பிரமாண்டமான முறையில் அன்னதானங்களும் பிரசாதமும் கஞ்சிவார்த்தலும் நடைபெற்றன. இவைகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முக்கியமாக ஏழைமக்கள் பக்திசிரத்தையுடன் கலந்துகொண்டு அன்னதானம் முதலியவற்றைப் பெற்றுக்கொண்டனர்.

கவியரசரின் வாழ்க்கை வரலாறு

சத்யஜித்ரே தயாரித்துள்ள திரைப்படம்

புதுடில்லி, மே 2

கவியரசர் தாகூரின் நூற்றாண்டுவிழா நேற்று முதல் உலகெங்கும் கொண்டாடப்பட்டுவருகிறது.

கவியரசரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் திரைப்படம் நேற்றுப் புதுடில்லியில் திரையிடப்பட்டதுடன் இந்தியாவில் கவியரசரின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகின.

கவியரசர் இந்திய விடுதலைப் போராட்டத்துக்குச் செய்த சேவை முதல் அவரது வாழ்க்கையின் முக்கிய சம்பவங்களை விளக்கிக் காட்டும் இத்திரைப் படத்தைப் புகழ் பெற்ற இந்திய திரைப்படத் தயாரிப்பாளர் திரு. சத்யஜித்ரே தயாரித்திருக்கிறார்.

இப்படம் நேற்றுப் புதுடில்லியில் திரையிடப்பட்டபோது பிரதமர் நேரு, உபஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் முதலிய தலைவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் பார்வையிட்டனர்.

இதர ராஜ்யங்களிலும் இப்படம் நேற்று முதன்முதலாகத் திரையிடப்பட்டபோது தலைவர்களும் பிரமுகர்களும் இப்படத்தைப் பார்வையிட்டனர்.

மொனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉரிமையில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

மொனரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
முவர்ண கலர்
லேபிளுடன்
மயில் – ரோஸ்
அடையாள மிட்டு

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

ஏ. எம். புகாரி அன் கோ

99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

"தொழிற்சங்கங்களை சீர்திருத்துவோம்"

மேதினக் கூட்டத்தில் திரு. டட்லி பேச்சு

கொழும்பு, மே 2

"அரசியலில் அதிகக் கலப்புள்ள இன்றைய தொழிற் சங்கங்களை இந்தநாட்டில் சீர்திருத்தி அமைக்க ஐக்கிய தேசியக்கட்சி முயற்சிசெய்யும்" என்று தேசிய ஊழியர் சங்கத்தின் முதலாவது மேதினவிழாவில் பேசுகையில் திரு. டட்லி சேனநாயக்கா கூறினார்.

திரு. சேனநாயக்கா மேலும் பேசுகையில், பணக்காரர் மேலும் பணம்படைத்தவராயினர்; ஏழைகள் மிகவும் ஏழைகளாக்கப்பட்டனர் என்ற மார்க்ஸின் கொள்கையைக் குறிப்பிட்டு, இவ்வித நிலை ஏற்பட்டபோது தொழிலாளர் இரத்தம் சிந்தி அதிகாரத்தைக் கைப்பற்றினர் எனக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் ரஷ்யாவில் தொழிற்சங்கங்கள் அல்லது ஊழியர் சங்கங்கள் உண்டா என்று தாம் தொழிற் சங்கத் தலைவர்களிடம் கேட்க விரும்புவதாகவும் தொழிற்சங்கத் தலைவர்கள் தொழிலாளர்களை ஏமாற்றுவதுடன் புத்த குருமார்களையும் ஏமாற்ற முயலுகின்றார்கள் என்றார்.

யு. என். பி. அரசாங்கம் இருக்கையிலேயே தொழிலாளர் யுகம் ஆரம்பமானதென்றும், 'தொழிலாளர் தலைவர்' என்று அழைக்கப்படுபவர்கள் தமது தேவையைப் பூர்த்தி செய்யவே தொழிலாளரைப் பயன் படுத்திக்கொள்ளுகின்றார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை வானொலிக்கு கண்டனம்

பயாகலை, மே 3

"மின்னல் ஏற்படும் சமயத்தில் ரேடியோவை மக்கள் எவ்விதம் உபயோகிக்க வேண்டும் என்பதை இலங்கை வானொலி நிலையம் விபரமாகத் தெரிவிக்கவேண்டும்" என்று பயாகலை திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. எம். எம். சாலி இலங்கைவானொலி நிலையத்தை கண்டித்துள்ளார்.

மின்னல் ஏற்பட்டசமயத்தில், வீட்டிலே பாடிக்கொண்டிருந்த 'பாட்டரி' ரேடியோவொன்றை நிற்பாட்ட முயற்சித்தபோது ஏற்பட்ட மின்னல் தாக்குதலினால் மரணமடைந்த 18 வயதுள்ள எம். ஐ. எம். இமாறு உம்மாவின் மரணவிசாரணையின் போது திரு. சாலி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முதல் மாணவன்

யாழ்ப்பாணம், சனி

புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தாக் கல்லூரியின் சரித்திரத்தில் முதன்முதலாகத் திரு. வி. இலகுப்பிள்ளை என்ற மாணவன் இலங்கைப் பல்கலைக் கழகப் பிரவேசப் பரீட்சையில் விஞ்ஞான் மாணவனாக அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

டிகாலுக்கு பலத்த பந்தோபஸ்து

பாரிஸ், மே 2

பிரஞ்சு ஜனாதிபதி டிகாலின் உயிருக்குத் தீங்கிழைக்க முயற்சிகள் நடைபெறுகிறதென்ற தகவலைத் தொடர்ந்து அவருக்கு பலத்தபந்தோபஸ்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. விசுவாசமும் திறமையுமுள்ள ஆயுதந்தாங்கிய வீரர்கள் ஜெனரல் டிகாலின் வாசஸ்தலத்தைக் காவல்புரிகின்றனர்.

அல்ஜீரியாவில் சமீபத்தில் தோல்வியில் முடிந்த கலகத்தைத்தொடர்ந்துஅல்ஜீயர்ஸில் பன்னிரண்டாயிரம் பேருக்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைத்தசெய்தி கூறுகிறது. பாரிஸிலும் பெருந்தொகையானோர் கைதுசெய்து காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆண்டுவிழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

சித்திரை பௌர்ரணை தினத்தன்று நடைபெறும் அச்சுவேலி ஸ்ரீவிக்னேஸ்வர சனசமூக நிலையத்தின் ஆண்டுவிழாக் கொண்டாட்டம் இம்முறை நடைபெறவில்லை.

விளையாட்டு, பகிரங்கக் கூட்டம், இசை, நாடகம் ஆகிய நாற்பெரும் பிரிவுகளாக வருடா வருடம் கோலாகலமாக நடைபெறும். மேற்படி நிலையத்தின் ஆண்டுவிழாக் கொண்டாட்டம் இம்முறை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கனடாவின் மிகப்பெரிய விற்பனை

கனடா, மே 2

கோதுமை, பார்லி போன்ற தானிய வகைகளை அதிகமான அளவில் சீனாவிற்கு விற்பனவு செய்ய கனடா அரசாங்கம் ஒப்பந்தம் செய்திருக்கிறது.

மிகப்பெரிய அளவில் விற்பனவு செய்வது இதுவே கனடாவின் முதல்தடவையாகும் என்று கூறப்படுகிறது.

ஐஸனோவரின் ஜப்பான் விஜயம் ரத்து

நியூயோர்க், மே 2

அக்டோபர் மாதத்தில் ஜப்பானுக்கு விஜயம் செய்யத் திட்டமிட்டிருந்த முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி திரு. ஐஸனோவர் தமது திட்டத்தை ரத்துச்செய்து விட்டார்.

அரசாங்க காரியாலயத்தின் ஆலோசனையின் மீதே அவர் தமது ஜப்பான் விஜயத்தை ரத்துச்செய்தாராம்.

கியூபா சம்பந்தமாக ஜனாதிபதி கென்னடியின் கொள்கையை அமெரிக்க மக்கள் பூரணமாக ஆதரிக்கவேண்டுமென்று முன்னாள் ஜனாதிபதி ஐஸனோவர் கேட்டுக் கொண்டார்.

மொழிப்பிரச்சினைக்கு தீர்வு காண்க!

சமசமாஜ மேதினக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, செவ்வாய்

மொழி உரிமை சம்பந்தமாக தமிழ் மக்களின் குறைகளை அங்கீகரிப்பதன் மூலம் மொழிப் பிரச்சினைக்கு சுமுகமான ஒரு தீர்வு காண விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானமொன்று காலிமுக மைதானத்தில் நேற்று மாலை சமசமாஜக் கட்சியின் ஆதரவில் நடைபெற்ற, தொழிற் சங்கங்களின் இணைப்பு மேதினக் கூட்டத்தில் நிறைவேறியது.

மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காணாதவரை இலங்கையின் ஐக்கியத்துக்கு தொடர்ந்து ஆபத்து இருந்து வருமென்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை அமுல் நடத்துவதற்கு இடையூறு இருந்து வருமென்றும் அத்தீர்மானம் சுட்டிக் காட்டியது.

இக்கூட்டத்துக்கு டாக்டர் என். எம். பெரேரா தலைமை வகித்துப் பேசுகையில் பெரிய தொழிற் சங்கங்கள் யாவும் ஒன்று சேர்ந்து மேதின விழாவைக் கொண்டாடும் இச்சமயத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவிலுள்ள இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் தனியாகக் கூட்டம் நடத்துவதைக் கண்டித்தார். "கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்கள் எப்பொழுதுமே விசுவாசமற்றவை" என்று டாக்டர் என். எம். பெரேரா கூறினார்.

தொழிலாளர், விவசாயிகளின் அரசாங்கம் அமைக்க முயற்சி செய்யுமாறு டாக்டர் பெரேரா மக்களைக் கேட்டுக் கொண்டார்.

கட்டாய மதக் கல்வி

கொழும்பு, செவ்வாய்

அரசினர் பாடசாலைகளிலும் வித்தியாபதியின் நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்கள் அவர்களுடைய தந்தையின்பற்றும் மதத்தைக் கட்டாயமாகக் கற்க வேண்டுமென்று கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஒரு பிள்ளையின் தாயார் வேறு மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் தந்தையின் மதத்தைத்தான் பிள்ளை படிக்க வேண்டுமென்பது கல்வி அமைச்சு தயாரித்துள்ள திட்டங்களில் ஒன்று.

தந்தையார் காலமாகிவிட்டால் தாயாரின் மதத்தைப் பிள்ளை கற்கலாம்.

ஜி. ஸி. ஈ. பரீட்சைக்குச் சமயபாடம் இனிக் கட்டாய பாடமாக இருக்க வேண்டுமென்றும் பிள்ளைகள் தங்கள் தந்தையின் மதத்தைக் கற்க வேண்டுமெனக் கட்டாயப் படுத்தப்பட வேண்டுமென்றும் அரசினர் பாடசாலை அதிபர்களுக்கும் வித்தியாதிபதியின் நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலைகளுக்கும் கல்வி டைரக்டர் உத்தரவிட்டுள்ளார்.

சிங்களப்படத்திற்கு மேலும் தடை

கொழும்பு, மே, 3

இலங்கையில் தயாரிக்கப்பட்ட "ஜீவித பூஜாவ" என்ற மற்றுமொரு சிங்களப்படம், சினிமா தணிக்கை சபையினரால் தடை செய்யப்பட்டுள்ளது.

சினிமாப்படத்திலுள்ள சில காட்சிகள் நாட்டிற்குபொருத்த மற்றவைகளாக இருப்பதால் இப்படத்தை தடை செய்துள்ளோம் என தணிக்கை அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

சாராயத் தவறணைகள் மீண்டும் திறக்கப்படும்

கொழும்பு, மே 3

"சட்டவிதிகளை அரசாங்கம் ஆராய்ந்து ஒழுங்கு செய்தால், உள்ளூர் நிலையங்களால் மூடப்பட்டிருக்கும் சாராயத் தவறணைகள் மீண்டும் திறக்கப்படலாம்" என்று கைத்தொழில் கலாச்சார விவகார மந்திரியின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஷெல்டன். ஸி. பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

திரு. பெர்ணான்டோ மேலும் தெரிவிப்பதாவது:—

பொலிஸ் பகுதியினருக்கும், கலால் பகுதியினருக்கும் பெரும் துன்பத்தையும், கஷ்டத்தையும் கொடுத்துள்ள "கசிப்பு" உற்பத்தியைப் பூண்டோடு அழிப்பதற்காகவே, அமைச்சு மீண்டும் இந்த சாராயத் தவறணைகள் திறக்கும் யோசனையில் ஈடுபட்டுள்ளது.

இவ்வேளையில் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் கமிட்டியினால் நியமிக்கப்பட்டிருக்கும் 16 பேர் கொண்ட விசேஷக்குழு, எந்த வகையில் இந்தக் "கசிப்பு" உற்பத்தியை மக்களிடமிருந்து பிரிக்கலாம் என்பதை ஆராய்ந்து அரசாங்கத்திற்கு தெரிவிக்கும்.

கைதியின் துணிச்சல்!

ருகம, மே 3

"எனக்கு கைக்குண்டு ஒன்று கொண்டுவரவும்" என்று மகாறு சிறைக்கைதியொருவர், மகாறுச் சிறையிலிருந்து வெளியேறிய தனது நண்பனுக்கு கடிதமூலம் தெரிவித்திருக்கின்றார்!

கைதிகள் குளிக்கும் கிணற்றின் அருகில் கைக்குண்டொன்றைப் புதைத்து வைக்கும்படி எழுதிய இக்கடிதம் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கைதி இப்போது வெளிகடை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டி பாடசாலைகள்

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டித் தொகுதியில் வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியையும், திருஇருதயக் கல்லூரியையும் தவிர ஏனைய பாடசாலைகள் வரவு குறைந்திருந்தபோதும் வழக்கம் போல நடைபெற்றன.

மன்னர் ஹூஸெய்னுக்கு திருமணம்

அம்மான், மே 2

ஜோர்டான் மன்னர் ஹூஸெய்னின் திருமணத்தை ஒட்டி இன்று நாடெங்கும் கொண்டாட்டம் நடைபெற்றது. 25 வயதான ஜோர்டான் மன்னர், 20 வயதான ஒரு சாதாரண ஆங்கிலப் பெண்ணை மணக்கிறார். ஏற்கனவே விவாகரத்து செய்த மன்னருக்கு ஒரு புதல்வி இருக்கிறார்.

கரவெட்டி யூனியனின் வெற்றி

உடுப்பிட்டி, புதன்

இன்று பிற்பகல் கரவெட்டி யூனியனுக்கும், நெல்லியடி விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில், கரவெட்டி யூனியன் 2-0 வெற்றி பெற்றது. கரவெட்டி யூனியன் வீரரான மணிசுந்தரம் தமது மின்வெட்டுகளால் பாராட்டுப் பெற்றார். நெல்லியடிக் கோஷ்டி சார்பில் கனகரத்தினமும், தவராஜாவும் திறம்பட விளையாடினர்.

கியூபாவில் தேர்தல்கள் இல்லை

புளோறிடா, மே 3

கியூபா ஒரு சோசலிஸ்ட் நாடென்றும் இனிமேல் அங்கு பொதுத்தேர்தல்கள் நடைபெறமாட்டாதென்றும் பிரதமர் பெடல் கெஸ்ட்ரோ தெரிவித்துள்ளார்.

மூன்று கோடிமக்கள் மத்தியில், உங்களுக்குத் தேர்தல்கள் வேண்டுமா?" என்று டக்டர் கெஸ்ட்ரோ கேட்டபோது மக்கள் எல்லோரும் "வேண்டாம், வேண்டாம்!" என்று தெரிவித்ததாக செய்திகள் கூறுகின்றன.

சென்னையிலும் மதுரையிலும் மேதின ஊர்வலங்களும் பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன.

∴ ∴ ∴

கள்ள பாஸ்போர்ட்டுடன் வெளிநாட்டுப் பிரயாணம் செய்பவர்கள்பற்றிப் புகார்கள் கிடைத்துள்ளதாயும், இதுசம்பந்தமாக தமிழ்நாடு உள்ளிட்டுப் பலபகுதிகளில் ஏஜெண்டுகள் கைதுசெய்யப்பட்டிருப்பதாயும், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாயும் பிரதமர் நேரு தெரிவித்தார்.

திருமணம்

தியாகலிங்கம் — சிவநேசம்

கொழும்பு "சரஸ்வதி ஒயில் மில்ஸ்" கூட்டுச் சொந்தக்காரர் திரு ராமநாதன் செட்டியார் அவர்களின் மகன் தியாகலிங்கம் அவர்களுக்கும், யாழ்ப்பாணம், பெரியகடை வர்த்தகர் திரு. ராமையாச் செட்டியார் அவர்களின் மகள் சிவநேசத்திற்கும் வரும் 6-5-61 சனிக்கிழமை காலை 8-30 — 9-15 மணிக்கிடையில் மணமகளில்லத்தில் நடைபெற இருக்கும் திருமணத்திற்கு உறவினர்களும் நண்பர்களும் அழைக்கப்படுகின்றனர். தனித்தனி அழைப்பாக இதை ஏற்றுக்கொள்ளக் கேட்டுக் கொள்கின்றோம்.

சி. ராமையாச் செட்டியார்
"மனோன்மணி வாசா"
236/5, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கே. ராமநாதன் செட்டியார்
"சரஸ்வதி ஒயில் மில்ஸ்"
ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

தமிழிலக்கியம்

(G. C. E. பரீக்ஷைக்குரியது)

கம்பராமாயணம் — சுந்தரகாண்டம்
காட்சிப்படலம் — நிந்தனைப்படலம்

பலராலும் உரையாசிரியர் என நன்கு மதிக்கப்பெற்ற
ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள்
எழுதிய
கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை, இலக்கணக்குறிப்பு என்னும் பகுதிகள் அமைந்த பாரதி பாடல்கள் தொகுப்பு, விளக்கமும், குறிப்பும், பயிற்சி வினாக்களும்.

வெளியிடுபவர்:
மாணவர் தமிழ் வாசகங்களினதும்
ஸ்ரீ லங்கா ஆங்கிலப்பாட புத்தகங்களினதும் ஆசிரியர்
வே. கணபதிப்பிள்ளை
காரைநகர்.

கிடைக்குமிடம்:
சண்முகநாதன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
ஜெயா புத்தகசாலை, கொழும்பு.
லங்கா சென்ட்ரல் புத்தகசாலை, கண்டி.
Ratna Stores, Malay Street, Colombo-2.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மே மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.